NATIONAL LIBRARY OF SRI LANKA
N L S L

# புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

## வெளியீட்டு உதவித் திட்டம் - 2026 / 2027


வெளியீட்டு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

இல 14. சுதந்திர வழி,

கொழும்பு 07

2027 ஆம் ஆண்டுக்கான கையெழுத்துப் பிரதிகள் 2026 செப்டம்பர் 15 முதல் 2026 டிசம்பர் 15 ஆம் திகதி வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் | - விண்ணப்பப்படிவத்தையும் விபரப் பத்திரத்தையும் 250.00 ரூபாய் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். |
| கடிதங்களும் விசாரணைகளும் | - பணிப்பாளர் நாயகம் |


தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

இல. 14, சுதந்திர வழி,

கொழும்பு 07

தொலைபேசி இலக்கம் : 011 2687583

மின்னஞ்சல்: **pub@mail.natlib.lk**

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

# வெளியீட்டு உதவித் திட்டம்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மூலம் ஆரம்பநிலை மற்றும் தேர்ச்சிப்பெற்ற எழுத்தாளர்களின் எழுத்தாற்றல் முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் வெளியீட்டு உதவித்திட்டமானது, 1984 ஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்படும் ஓர் தேசிய செயற்திட்டமாகும்.

## 01. நோக்கங்கள்

i. உயர் தரமான உள்நாட்டு நூல்களைப் பரவலாகக் கிடைக்கச் செய்தல்.
ii. புத்தக வாசிப்பை ஊக்குவித்தல்.
iii. நூலாசிரியர்களையும் மொழிபெயர்ப்பாளர்களையும் ஊக்குவித்தல்.
iv. வெளியீடுகளின் உற்பத்தித் தரத்தையும் தரநிலையையும் உயர்ந்த மட்டத்திற்கு மேம்படுத்துதல்.
v. வெளியீடுகளின் விலையை நியாயமான மட்டத்தில் பேணுதல்.
vi. தேசிய நூலக சேவையை அபிவிருத்தி செய்தல்.

## 02. சமர்ப்பிக்கக்கூடிய கையெழுத்துப் பிரதிகள்

பின்வரும் பல்வேறு துறைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

i. கல்வியியல் / ஆய்வு நூல்கள்
ii. படைப்பிலக்கிய நூல்கள் (நாவல்கள்/ சிறுகதைகள்/ கவிதைகள்/ நாடகங்கள்/ பாட்டுகள் முதலியன)
iii. இளையோர் இலக்கிய படைப்புக்கள்
iv. சிறுவர் இலக்கியம்
v. பல்வேறு விடயப் படைப்புகள்

## 03. சமர்ப்பிக்க முடியாத கையெழுத்துப் பிரதிகள்

பின்வரும் வகைகளைச் சார்ந்த கையெழுத்துப் பிரதிகளை இத்திட்டத்திற்காக சமர்ப்பிக்க முடியாது.

i. முன்னர் அச்சிட்டு வெளியிட்ட நூல்களின் கையெழுத்துப் பிரதிகள்.
ii. பரீட்சைக் கலைத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட துணை நூல்கள் அல்லது பரீட்சையை இலக்காகக் கொண்டு வினாவிடை வடிவில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
iii. யுனெஸ்கோவின் அளவுகோல்களுக்கமைய, அச்சிடப்பட்ட பின்னர் 49 பக்கங்களுக்கு குறைவாக அமையக்கூடிய கையெழுத்துப் பிரதிகள் (16 பக்கங்களுக்கு குறைவாக அமையக்கூடிய சிறுவர் படைப்புகள்)
iv. போதியளவு வரிகளற்ற படங்கள், வடிவமைப்புக்கள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கிய வெளியீடுகள்.
v. சித்திரக் கதை வகையைச் சேர்ந்த கையெழுத்துப் பிரதிகள்.
vi. புத்தக வடிவில் தொகுக்கப்படாத பட்டப்படிப்பு ஆய்வுக் கட்டுரைகள்.
vii. வேறு ஏதேனும் உதவித் திட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
viii. முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
ix. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு உதவித் திட்டங்களின் கீழ் இதற்கு முன் 05 தடவைகள் அச்சிடும் உதவியைப் பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.

## 04. உதவி வழங்கும் நடைமுறை

குறிப்பிடத்தக்க உயர்தரத்தில் காணப்படும் கையெழுத்துப் பிரதிகளின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதுடன், உயர் அச்சிடல் மற்றும் வெளியீட்டுத் தரநிலைகளை அறிமுகப்படுத்தி, அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் அச்சிடப்பட்ட பின்னர் அவற்றின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிகளை கொள்வனவு செய்வதன் மூலம், இத்திட்டத்தின் கீழ், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எழுத்தாளர்களுக்கு உதவி வழங்குகின்றது. உள்ளடக்கத் தரத்திலும், பௌதிகத் தோற்றத்திலும் உயர்தரமான நூல்களை சமூகமயப்படுத்துவதன் மூலம், எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் சேவையாற்றும் நோக்கில் இத்திட்டத்தின் கீழ் 2027 ஆம் ஆண்டிற்காக, மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற தரமான கையெழுத்துப் பிரதிகளில் 30 கையெழுத்துப் பிரதிகளுக்கு ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் அனுசரணை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்படும் 30 கையெழுத்துப் பிரதிகளும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் சேர்ந்தவையாகும்.

| **கையெழுத்துப் பிரதிகளை சமர்ப்பிக்கக்கூடிய பகுதிகள் மற்றும் முன்மொழியப்பட்ட மானியத் தொகை** | | |
|---|---|---|
| **விடயப் பகுதி** | **ஒரு எழுத்தாளருக்கு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள உதவித்தொகை (ரூ.)** | **உதவித்தொகை வழங்கப்படவுள்ள கையெழுத்து பிரதிகளின் எண்ணிக்கை** |
| 1. கல்வியியல் / ஆய்வு நூல்கள் | 150,000.00 | 03 |
| 2. | | |
| i. நாவல் | 125,000.00 | 05 |
| ii. சிறுகதை | 100,000.00 | 03 |
| iii. கவிதை/ பாட்டு/ நாடகம்…. | 75,000.00 | 05 |
| 3. | | |
| i. இளையோர் இலக்கியங்கள் | 75,000.00 | 04 |
| ii. சிறுவர் இலக்கியம் | 75,000.00 | 05 |
| 4. பல்வேறுப்பட்ட விடயப் படைப்புகள் | 100,000.00 | 05 |
| **மொத்தம்** | | **30** |

மேற்குறிப்பிட்ட வகைகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் மொழிபெயர்ப்புக் கையெழுத்துப் பிரதிகளுக்கும் உரிய உதவித் தொகை பொருந்தும். மொழிபெயர்க்கப்பட்ட கையெழுத்துப் பிரதியுடன் மூல நூலின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அனுசரணை வழங்கப்படும் ஒரு நூலின் குறைந்தபட்சம் 1,000 பிரதிகள் வெளியிடப்பட வேண்டும். இயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதனைவிட அதிக எண்ணிக்கையிலான பிரதிகளை அச்சிட்டு விநியோகிப்பதன் மூலம் உள்நாட்டு வாசகர்களுக்கும் நூலகங்களுக்கும் ஆதரவளிப்பதுடன், ஒரு பிரதியின் விலையை நியாயமான மட்டத்தில் பேணுவதையும் தேசிய நூலக மற்றும் ஆவணச் சேவைகள் சபை எதிர்பார்க்கின்றது.

இதற்கமைய, சபையின் அச்சிடல் ஆலோசனைக் குழுவினால் தீர்மானிக்கப்படும் தொகைக்கு ஏற்ப, அதற்குச் சமமான எண்ணிக்கையிலான அச்சிடப்பட்ட பிரதிகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் சபை எழுத்தாளருக்கு உதவி வழங்கும்.

## 05. கையெழுத்துப் பிரதிகளைத் தயாரித்தல்.

i. சம்பந்தப்பட்ட கையெழுத்துப் பிரதியின் உள்ளடக்கத்தில் எந்தவொரு மதம், இனம், பிரிவு, நிறுவனம் அல்லது தனிநபரின் பெயரையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ குற்றம் சாட்டக்கூடிய அல்லது குறைகூறக்கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடாது.
ii. கையெழுத்துப் பிரதியானது ஒரு பக்கத்தில் அல்லது இருபக்கங்களிலும் தெளிவாகவும், பிழையின்றியும் கணினி எழுத்து வடிவில் அச்சிடப்பட்டதாகவோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருக்க வேண்டும்.
iii. மதிப்பீட்டாளரால் தனது அவதானிப்புகளை இலகுவாகப் பதிவு செய்யக்கூடிய வகையில், தாளின் இடது ஓரத்திலும் வரிகளுக்கு இடையிலும் போதுமான இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
iv. அச்சடிக்கப்படுகின்ற பிரதியில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் ஓவியங்கள், நிழற்படங்கள், புள்ளிவிபரங்கள், நூல்பட்டியல், சுட்டிகள், பொருளடக்கம் முதலியவற்றை கையெழுத்துப் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். அறிமுகம், முன்னுரை, பின்னுரை, சமர்ப்பணம் மற்றும் அட்டை உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
v. கையெழுத்துப் பிரதி சீராகவும் நேர்த்தியாகவும் கட்டப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
vi. கையெழுத்துப் பிரதியில் நூலாசிரியரின் பெயரையோ அவரை அடையாளப்படுத்தக்கூடிய வேறு சின்னத்தையோ உள்ளடக்கப்படல் கூடாது. அதேசமயம் பக்கங்களை சரியான முறையில் இலக்கமிட்டிருத்தல் வேண்டும்.
vii. கையெழுத்துப் பிரதியைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அதன் மொழிநடை நன்கு செம்மைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான மொழிப் பிழைகளைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.
viii. பல்கலைக்கழகமொன்றிற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை அவ்வாறே சமர்ப்பிக்க முடியாது. அவ்வாய்வுக் கட்டுரைகள் முறையாக ஒரு நூல் வடிவில் தொகுக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், இவ்வாறான கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிக்கும் போது, குறித்த ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் மேற்பார்வையாளர் தொடர்பான தகவல்களும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையில் முறையாகத் தயாரிக்கப்படாமல் சமர்ப்பிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகள் மதிப்பீட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## 06. விண்ணப்பங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் சமர்ப்பித்தல்

i. கல்விசார் அல்லது இலக்கியப் பெறுமதியைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகளுக்கு மாத்திரமே இத்திட்டத்தின் கீழ் அனுசரணை வழங்கப்படும். அதற்கான தகுதி / தகுதியின்மையைப் பரிசீலிப்பதற்காக, உரிய விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, நூலின் இரண்டு பிரதிகள் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். (விண்ணப்பக் கட்டணம் ரூ. 250.00)
ii. மொழிபெயர்ப்பு நூலொன்றை வெளியிடும்போது ஏற்படக்கூடிய சட்டரீதியான பிரச்சினைகள் இருப்பின், அவற்றைத் தீர்த்துக்கொள்வது ஆசிரியர்/ மொழிபெயர்ப்பாளர்/ வெளியீட்டாளரின் பொறுப்பாகும்.
iii. சிறுவர் நூல்களைச் சமர்ப்பிக்கும் போது, ஒரு பிரதியானது 4 நிறங்களில் (CMYK) தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 5 படங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். சிறுவர் நூல்களின் இரண்டு கையெழுத்துப் பிரதிகளுக்கு மேலதிகமாக, அதன் மென்பிரதி (Soft Copy) pub@mail.natlib.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
iv. ஒரு எழுத்தாளரால் ஒரு வருடத்தில் ஒரு கையெழுத்துப் பிரதியை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

## 07. முதற்கட்டப் பரிசோதனை

சம்பந்தப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் தொடர்பான முதற்கட்டப் பரிசோதனை சபையின் வெளியீட்டு ஆலோசனைக் குழுவினால் மேற்கொள்ளப்படும். இதன்போது, இத்திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கான முதற்கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் மாத்திரமே மதிப்பீட்டிற்காகத் தெரிவு செய்யப்படும். வெளியீட்டு ஆலோசனைக் குழுவினால் முதற்கட்டப் பரிசோதனையின்போது நிராகரிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகள், உரிய மதிப்பீட்டுக் கட்டணத்துடன் எழுத்தாளருக்கு மீள அனுப்பி வைக்கப்படும்.

## 08. மதிப்பாய்வுக் கட்டணம்

i. கல்வியில் / ஆய்வு கையெழுத்துப் பிரதிக்கான மதிப்பாய்வு

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (A-4) | ரூபா 2,000.00 |
| 150 பக்கங்களுக்கு மேற்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் | ரூபா 10.00 |

ii. நாவல்/சிறுகதை/கவிதை/நாடகம் உட்பட படைப்பிலக்கியங்கள்/ இளையோர் இலக்கிய கையெழுத்துப் பிரதிக்கான மதிப்பாய்வு

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (A-4) | ரூபா 1,200.00 |
| 150 பக்கங்களுக்கு மேற்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் | ரூபா 7.00 |

iii. சிறுவர் இலக்கிய கையெழுத்துப் பிரதிக்கான மதிப்பாய்வு

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (A-4) | ரூபா 1,000.00 |

மதிப்பீட்டுக் கட்டணத்திற்கான காசோலைகள் ‘‘தலைவர், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை’’ என்ற பெயரில் எழுதப்பட வேண்டும். பணமாகச் செலுத்துவதாயின், அலுவலக நேரங்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை சபையின் காசாளரிடம் பணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது, நாட்டிலுள்ள எந்தவொரு **மக்கள் வங்கிக் கிளையிலும், மக்கள் வங்கி, கொழும்பு டவுன் ஹோல் கிளையில் 167-1-001-6-3170315 என்ற கணக்கிலக்கத்தைக் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணச் சேவைகள் சபையின்** கணக்கில் பணத்தை வைப்பிலிட்டு, அதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்புச் சீட்டை கையெழுத்துப் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

கையெழுத்துப் பிரதிகள் பொதுவாக இரு மதிப்பீட்டாளர்களுக்கும் அல்லது விசேட சந்தர்ப்பங்களில் மூன்று மதிப்பீட்டாளர்களுக்கும் அனுப்பப்படுவதால், இக்கட்டணத்தின் மூலம் மதிப்பீட்டுச் செலவின் ஒரு பகுதி மாத்திரமே ஈடுசெய்யப்படுகிறது. மீதமுள்ள தொகையை சபை ஏற்கும். அத்துடன், ஆலோசனைக் குழுக்களுக்கான முழுச் செலவையும் சபையே ஏற்கும்.

இரண்டு மதிப்பீட்டு அறிக்கைகளில் ஒரு அறிக்கைக்கான கொடுப்பனவையும், சில சந்தர்ப்பங்களில் மீளாய்வு அறிக்கைகளுக்கான கொடுப்பனவுகளையும் சபை ஏற்கும்.

ஏதேனும் காரணத்தினால், அங்கீகரிக்கப்பட்ட தரத்தை அடைந்த கையெழுத்துப் பிரதியொன்று இத்திட்டத்திலிருந்து மீளப் பெறப்பட்டால், மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கைக்காக சபையினால் ஏற்கப்பட்ட செலவை எழுத்தாளர் செலுத்த வேண்டும்.

## 09. இரகசியத் தன்மை

கையெழுத்துப்பிரதியின் மதிப்பாய்வின்போது மதிப்பாய்வாளருக்கு நூலசிரியர் பற்றியோ நூலாசிரியருக்கு மதிப்பாய்வாளர் பற்றியோ எதுவித தகவல்களும் வெளியிடப்பட மாட்டாது. இந்த இரகசியத்தன்மைக்கு தடைவிதித்தல் அல்லது தடைசெய்வதற்கு எத்தனித்தல் கையெழுத்துப் பிரதியை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.

## 10. மதிப்பீடு

மதிப்பீட்டிற்குத் தகுதியான ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியும் பொதுவாக இரு மதிப்பீட்டாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இம்மதிப்பீட்டுக் குழுவானது குறித்த விடயத்துறை தொடர்பில் நிபுணத்துவம் கொண்டவர்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். மதிப்பீட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை வெளியீட்டு ஆலோசனைக் குழு பரிசீலித்த பின்னர், குறித்த கையெழுத்துப் பிரதியை ஏற்றுக்கொள்வதா அல்லது ஏற்றுக்கொள்ளாதிருப்பதா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் மீளப் பரிசீலிக்கப்பட வேண்டும் எனக் குழுவினால் தீர்மானிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவற்றுடன் தொடர்புடைய பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டு ஆசிரியருக்கு அறிவிக்கப்படும். மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான முழுமையான உரிமை சபைக்கே உரித்தானதாகும். எக்காரணத்திற்காகவும் அவை நேரடியாக எழுத்தாளருக்கு வழங்கப்படமாட்டாது.

## 11. நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்

கையெழுத்துப் பிரதிகளுக்கு உதவி வழங்குவதற்காக அவற்றை அங்கீகரிப்பது அல்லது நிராகரிப்பது தொடர்பில் வெளியீட்டு ஆலோசனைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் எழுத்தாளருக்கு மீள அனுப்பி வைக்கப்படும். அவ்வாறான கையெழுத்துப் பிரதிகளை மதிப்பீடு செய்வதற்காக சபையினால் ஏற்கப்பட்ட மேலதிக மதிப்பீட்டுச் செலவுகள் எழுத்தாளரிடமிருந்து அறவிடப்படமாட்டாது.

## 12. நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளுக்கான மேன்முறையீடுகள்

நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் தொடர்பில் எழுத்தாளர் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும். குறித்த மேன்முறையீட்டை வெளியீட்டு ஆலோசனைக் குழு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், இதற்காக **ரூ. 1,000.00** மேன்முறையீட்டு வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். ஆலோசனைக் குழு குறித்த மேன்முறையீட்டை பரிசீலித்து, அது நியாயமான அடிப்படையைக் கொண்டுள்ளதாகத் தென்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை மீளாய்வு செய்வதற்காக மேன்முறையீட்டு உபகுழுவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

## 13. அச்சிடும்போது பூர்த்தி செய்யவேண்டிய தேவைகள்

நூல் வெளியீட்டு உதவித் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகளை அச்சிடும்போது பின்பற்ற வேண்டிய தரநிலைகள் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிடப்படும். குறித்த தரநிலைகளை பின்பற்றுவது நூலாசிரியரின் பொறுப்பாகும்.

i. சிறுவர் நூல்களைத் தவிர, ஏனைய அனைத்து நூல்களும் குறைந்தபட்சம் ஜி.எஸ்.எம்.70 இல.01 (70 GSM இல. 01) தரத்திலான காகிதத்தில் அச்சிடப்பட வேண்டும். சிறுவர் நூல்களுக்கு ஜி.எஸ்.எம் 80 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்.

ii. படைப்பிலக்கிய நூல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு 11 அல்லது 12 புள்ளி எழுத்துரு பயன்படுத்தப்பட வேண்டும், தேவைப்பட்டால் 10 புள்ளி எழுத்துருவை ஆய்வு ரீதியான கல்வியியல் நூல்களுக்குப் பயன்படுத்தலாம். சிறுவர் படைப்புகள் குறைந்தது 16 புள்ளி எழுத்துருவைப் பயன்படுத்த வேண்டும்.

iii. அச்சிடப்பட்ட நூலானது Section Binding அல்லது Perfect Binding முறையில் கட்டப்பட்டிருக்க வேண்டும். 250 பக்கங்களுக்கு மேற்பட்ட நூல்கள் கட்டாயமாக Section Binding முறையில் கட்டப்பட வேண்டும். சிறுவர் நூல்களுக்கு நூல் கட்டு அல்லது கம்பிக் கட்டு முறை பரிந்துரைக்கப்படுகிறது.

iv. நூற் தலைப்புப் பக்கத்தை உருவாக்கல் மற்றும் நூலின் வடிவமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரமான நூலியல் முறைகள் பின்பற்றப்பட வேண்டும். தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் வெளியிடப்பட்ட, இதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்ட ''சிறுவர் நூல் தயாரிப்பு முறைகள்'' மற்றும் ''நூல் தயாரிப்பு முறைகள்'' ஆகிய நூல்களை தேசிய நூலகப் புத்தகசாலையில் கொள்வனவு செய்வதற்கும் அல்லது தேசிய நூலகத்தின் வாசகர் சேவைகள் பிரிவில் பார்வையிடுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

v. அட்டையானது குறைந்தபட்சம் 230 GSM Art Board கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். அட்டையானது 4 நிறங்களில் (CMYK) அச்சிடப்பட்டதாக இருக்க வேண்டும். சிறுவர் நூல்களில் உள்ளகப் படங்கள் 4 நிறங்களில் (CMYK) அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

vi. அச்சிடும் போது எந்தவிதமான அச்சுப் பிழைகளும் இருக்கக்கூடாது.

vii. அச்சிடுவதற்கு முன்னர் நூலின் அட்டைப்படமும் முதற் பக்கங்களும் நூலக சபையில் காட்டி அங்கீகாரம் பெறவேண்டும்.

**14. ஒப்பந்தமும் வெளியீடும்**

i. திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை வெளியிடுவதற்கு முன்னர், எழுத்தாளர் சபையுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

ii. குறித்த ஒப்பந்தத்தின் மூலம், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியை நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக அச்சிட்டு, நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உரிய எண்ணிக்கையிலான அச்சிடப்பட்ட பிரதிகளை சபைக்குக் கொண்டு வந்து ஒப்படைப்பதாக எழுத்தாளர் உடன்பட வேண்டும்.

iii. உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக அச்சிடப்படும் நூல்களில் இருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிகளை, அச்சிடல் குழுவினால் தீர்மானிக்கப்படும் விலைக்கு கொள்வனவு செய்வதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை இதன்மூலம் உடன்படுகின்றது.

iv. அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை வெளியிடும் போது, சபையின் எழுத்துமூல அனுமதியின்றி குறித்த கையெழுத்துப் பிரதியில் எந்தவொரு பகுதியையும் புதிதாகச் சேர்ப்பதோ அல்லது கையெழுத்துப் பிரதியிலிருந்து எந்தவொரு பகுதியையும் நீக்குவதோ செய்யக்கூடாது.

v. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை எந்தவொரு வகையிலும் மீறுவது, ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான காரணமாக அமையும்.

vi. அச்சிடும் பணிகள் நிறைவடைந்த பின்னர், மாதிரி அச்சுப் பிரதிகள் இரண்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன்போது, குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக அச்சிடப்பட்டுள்ளதா என்பது பரிசோதிக்கப்படும். குறித்த மாதிரி அச்சுப் பிரதிகள்

அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், சபைக்கு வழங்கப்பட வேண்டிய அச்சுப் பிரதிகள் ஒப்படைக்கப்பட வேண்டும். சபைக்கு வழங்கப்படும் அனைத்து அச்சுப் பிரதிகளும், சபைக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி அச்சுப் பிரதியுடன் அனைத்து வகையிலும் ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

vii. வெளியீட்டு உதவித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்படும் படைப்புகளின் அச்சுப் பிரதிகளுடன், அவற்றின் மென்பிரதியும் (Soft Copy) சபைக்கு வழங்கப்பட வேண்டும். குறித்த மென்பிரதி, தேசிய டிஜிட்டல் நூலகத்தில் வாசகர்களின் பார்வைக்காக மட்டுமே உள்ளடக்கி வைக்கப்படும்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத, குறிப்பாக அச்சிடும் குறைபாடுகளைக் கொண்ட படைப்புகளை, வெளியீட்டு ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிராகரிப்பதற்கான முழுமையான அதிகாரம் சபைக்கு உண்டு.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**
**இல. 14, சுதந்திர வழி,**
**கொழும்பு 07**
**விசாரணைகள்: 011-2687583**